## தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

---

### 1. நிதிக்கூ ற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் கீழே காட்டப்பட்டுள்ள அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மேற்படி சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி உத்தியோகத்தர் அல்லது பிரதான கணக்காளரால் ஏசீஏ – 06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கையொப்பமிட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து கிடைத்த மாதிர பத்திரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதாகவும் மொத்தக் கூட்டுத்தொகை குறிப்பிடப்பட்ட நிதி நிலைமை கூற்றில் பிரதான கணக்காளர், கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

#### 1.6.2.1 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களின் மொத்தம் திறைசேரி அச்சிட்டுப் பிரதிகள் மற்றும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 19,163,919 ஆக இருந்த போதும், கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு ரூபா 17,823,785 என ரூபா 1,340,134 குறைவாக சீராக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதாகவும் அதன் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சரி செய்யப்பட்டு தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) மீளாய்வாண்டின் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் முற்பணக் கணக்கில் பெறுவனவு மீதிகளின் வேறுபாடு ரூபா 1,663,301 ஆன கட்டுநிதி சீராக்க கணக்கின் செலவிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும் திறைசேரி கணக்கு கூற்றின் பிரகாரம் குறுக்கு பதிவுகளின் கூட்டுத்தொகையான ரூபா 4,093,758 ஆன சீராக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 2,430,457 கூடுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதாகவும் அதன் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சரி செய்யப்பட்டு தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) மீளாய்வாண்டின் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் முற்பணக் கணக்கில் கொடுப்பனவு மீதிகளின் வேறுபாடு ரூபா 244,955 தொகை கட்டுநிதி சீராக்க கணக்கின் செலவிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும் திறைசேரி கணக்கு கூற்றின் பிரகாரம் குறுக்கு பதிவுகளின் கூட்டுத்தொகையான ரூபா 3,326,118 சீராக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதாகவும் அதன் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சரி செய்யப்பட்டு தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் இறுதியில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 467,915,465 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ஆரம்ப மீதிக்கு கூட்டப்பட்டதன் காரணமாக ஆரம்ப மீதி ரூபா 7,267,476,945 என ரூபா 6,799,561,480 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்த போதும், இவ்வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | வேறுபாடு நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்படாதிருந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். 2018 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு திறைசேரியின் இணையத்தளத்திற்கு பதிவேற்றப்படாமல் இருந்தமையால் அது 2019 ஆம் ஆண்டின் போது ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (அ) | மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக ரூபா 119,116,151 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஏசீஏ 06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டின் போதான கையேற்றலாக ரூபா 75,204,957 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 43,911,194 ஆக இருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | இதனை கணக்கீடு செய்யப்படவில்லையென்பதை ஏற்றுக் கொள்கின்றேன். 2020 பெப்ரவரி கணக்கு பொழிப்பொன்றினூடாக சரி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டில் ஏசீஏ - 06 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பயணிகள் வாகன கையேற்றலுக்காக ரூபா 351,500 கிரயமொன்று செலவிடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், 322-02-01-0-2101 செலவின விடயத்தின் கீழ் வாகன கையேற்றலுக்காக எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | இதனைச் சீராக்க நடவடிக்கை எடுப்ப தாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் கட்டணங்கள், மிகை கட்டணங்கள், தண்டப்பணம், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வருமானம் அல்லாத பெறுவனவுகளாக ரூபா 725,467,086 ஆக இருந்த போதிலும், திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 747,695,833 ஆக இருந்தது.அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 22,228,747 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறுக்கு பதிவுகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. கணக்காய்வினால் இதனை சரிசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவு ம், 2020 கணக்குகளை அதன் பிரகாரம் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 19,163,919 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 14,523,640 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 4,640,279 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறுக்கு பதிவுகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. கணக்காய்வினால் இதனை சரிசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவு ம், 2020 கணக்குகளை அதன் பிரகாரம் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) மீளாய்வாண்டின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முற்பண செயற்பாடுகளின் கீழ் முற்பண அறவீடுகள் ரூபா 1,081,250 ஆக இருந்த போதிலும், அது ரூபா 28,550,677 ஆக இருந்தது. மேலும் முற்பண கொடுப்பனவுகளின் ரூபா 32,988,531 ஆக இருந்த போதும், திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 36,080,995 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முதலீட்டு | வேறுபாடுகளுக்கு காரணம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறுக்கு பதிவுகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. கணக்காய்வினால் |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 24,376,963 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | இதனை சரிசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், 2020 கணக்குகளை அதன் பிரகாரம் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் வைப்புக்கள் பெறுவனவு ரூபா 55,209,601 ஆக இருந்த போதிலும், திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 269,825,491 ஆகவும் வைப்புக்கள் கொடுப்பனவு ரூபா 89,058,322 ஆக இருந்த போதும் திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 296,940,312 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 6,733,900 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நிதிச் செயற்பாடு களின் கீழ் சரியாக காட்டுதல் | காசுப்பாய்ச்சல் கூற்று காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறுக்கு பதிவுகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. கணக்காய்வினால் இதனை சரிசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும், 2020 கணக்குகளை அதன் பிரகாரம் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 1.6.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 63,324,055 கூட்டுத்தொகையான பயணிகள் வாகனங்கள் மற்றும் அழகிய தாவரங்கள் கைதவிர்ப்பதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்களின் கைதவிர்ப்பு பெறுமதி 2015 ஆம் ஆண்டு முதல் சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டதை திருத்துவதற்காக பதிவு செய்யப்பட்டவுடன் அழகிய பூங்கா கைதவிர்ப்பாக 2015 செலவின விடயங்களுக்குரிய பூங்காவின் வெவ்வேறு மேந்தலை செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. இது திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் செய்யப்பட்டது. |

### 1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| டிகணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிப்பதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதும் அறிக்கையின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | 09 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளை மிகைத்து, 03 ஆண்டுகள் முதல் 19 வரையான காலமொன்றாக அரசின் வீடுகளில் தொடர்ந்தும் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறு நீண்டகாலமாக குடியிருப்போருக்கு 03 ஆண்டு சலுகை காலம் வழங்கி பூங்கா செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உத்தியோகபூர்வ வீடுகளிலிருந்து வெளியேறுமாறு அறிவித்து எதிர்வரும் காலங்களில் வேறு விண்ணப்பதாரிகளுக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கோவையின் 01 ஆம் தொகுதியின் XVIII ஆம் அத்தியாயததின் 202 விதியின் ஏற்பாடுகள் | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் ஒரே இடத்தில் சேவை புரிந்து வந்தனர். | செயற்பாட்டுக் கோவையின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒன்றிணைந்த சேவைகளுக்குரிய ஊழியர்களின் இடமாற்றல் பொறுப்பு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் காணப்படுகின்றது. விவசாய மதியுரையாளர், கட்டணங்களை அறவிடும் உதவியாளர் மற்றும் பூங்காக சிறு பரிபாலகர் போன்ற பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றம் செய்தல் இத்திணைக்களத்தில் பிரிவுகள் அமைந்திருக்கும் விதத்திலும் கடமைகளின் தன்மையின் பிரகாரமும் நடைமுறை ரீதியாக சிக்கலானதாகும். இடமாற்றத்திற்காக கடமை தேவைப்பாட்டின் பேரில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேண்டுகோளை கருத்திற் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக செயலாளரின் சுற்றறிக்கை | திணைக்களத்தினால் மீளாயவாண்டில் ஆரம்ப தரங்களின் உத்தியோகத்தர்களுக்காக ஒரு நாள் பயிற்சியொன்று வழங்கப்பட்டிருந்த போதும் சுற்றறிக்கையின் பிரகாரம் 12 மணித்தியால பயிற்சிகாலம் மேவுகை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தருக்கு 12 மணித்தியால பயிற்சி யொன்றை 500 இற்கு மேற்பட்ட தொழிலாளர் விடயத்தில் வழங்குவது சிக்கலான விடயமொன்றாகும் அண்மித்த வகையில் 02 நாட்கள் சேவையிலிருந்து விலகி தொழிலாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவது நிதி ரீதயில் உட்பட நடைமுறை ரீதியிலும் சிக்கலான விடயமொன்றாகும் எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டில் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட மொன்றை நடாத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக கட்டுப்படுத்துவதற்காக மாதாந்தம் திணைக்களத்திற்கு தேவையான கட்டுநிதி அளவு தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு தேவையான கட்டுநிதி அளவு திட்டமிடப்பட வேண்டும். | திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் வருமானம் செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுவதால் வருடாந்த கட்டுநிதி தேவைப்பாடு திட்டமிடப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திருத்திய மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,000,000,000 ஆக இருந்த போதும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 713,347,445 ஆக இருந்தது, அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட ரூபா 286,652,555 அதாவது 29 சதவீதம் குறைவாக உழைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 85(1)(அ) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதி கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானம் மிகவும் செயற்திறனாக எதிர்வுகூறப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகளின் ஆகஸ்ட், செப்தம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்பட்டு இந்த மதபிபீடு திருத்தம் செய்யப்பட்ட போதும் 2019 ஆம் ஆண்டில் சுறங்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்தமை இதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரிய பேராதனை அரச பூங்காவின் கபெடேரியாமற்றம் பூங்காவின் மன்னால் உள்ள பால்நிலையம் எனபன குத்தகை அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கும் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 11,461,465 ஆன நிலுவை குத்தகை | நிலுவை வருமானம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | மேலும் 2019 நவம்பர் 1 ஆந் திகதி முதல் பால் நிலையம் திருத்த வேலைகளுக்காக மூடப்பட்ட காரணத்தினால் குறித்த நிறுவனத்திற்கு சலுகை காலமொன்று வழங்க நடவடிக்கை எடுத்தமையால் இந் நிலுவை வருமானம் நிலுவை வருமானக் |

| | | |
|---|---|---|
| தொடர்பாக மீளாய்வாண்டின் நிலுவை வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | கூற்றில் பதிவு செய்யப்படவில்லையெனவும் தவறொன்று காரணமாக 2006 மே 01 ஆந் திகதி முதல் 2008 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை கபெடேரியா சிற்றுண்டிச்சாலையின் நிலுவை குத்தகை நிலுவை வருமானக் கூற்றில் பதிவு செய்யப்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.3 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 மற்றும் 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மின்சாரம் மற்றும் நீர் செலவினம், தொலைபேசி சேவைகள் மற்றும் கொள்வனவுகள் முஐறயாக கட்டுப்பாட்டுடன் பராமரித்து செல்லும் வகையில் நியதிகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு சகல பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் கவனத்தில் கொள்ள வேண்டிய போதிலும் குறிதத் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 5,175,038 அதாவது 38 சதவீதம் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டில் இணைந்த படிகள் திருத்தம் செய்யப்பட்டமை புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை, சந்தை விலை மற்றும் வரி வகிதங்கள் அதிகரித்தமையால் பட்டியல் பெறுமதி அதிகரித்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 02 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு நிதிஏற்பாடான ரூபா 109,800,000 தொகையில் ரூபா 6,610,000 அதாவது 6 சதவீத ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் | வெளிநாட்டு சுற்றுலா தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டமை, இணைந்த படிகள் திருத்தம் செய்யப்பட்டமை, மீதலாவ பசுமை இல்ல பயிற்சி நிலையத்தின் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்காமை போன்ற காரங்களால் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் 14 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 416,450,000 ஆன ஆரம்ப நிதிஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்கள் மூலமும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் முறையே ரூபா 6,610,000 மற்றும் ரூபா 73,360,000 என ரூபா 79,970,000 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரட்டிய மதிப்பீடு அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது. | நிதிப்பிரமாணம் 50 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை, தாவரவியல் பூங்கா மு.ப 600 முதல் பி.ப 6.00 மணி வரை திறந்து வைத்திருந்தமையால் மேலதிக நேரம் மற்றும் ஏனைய தேவைகள் அதிகரித்தமை, சந்தை விலை அதிகரித்தமை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | தேசிய பாதீட்டு பணிப்பாளரின் நாயகத்தின் சுற்றறிக்கையின் 03/2019 ஆம் இலக்கம் மற்றும் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய மற்றும் 05/2019 ஆம் இலக்க 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன நிதி ஏற்பாடுகளிலிருந்து கட்டாயமாக 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதும் 10 செலவின விடயங்களில் ரூபா 431,700,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 396,197,183 செலவிடப்பட்டு 08 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூலதனச் செலவின விடயங்களில் 10 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும் 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை விநியோகிக்கப்படும் வரை உடன்படிக்கை செய்யப்பட்ட வேலைகள் ஆரம்பிகப்பட்டிருந்த அத்தியவசிய செயற்திட்டங்கள் அச்சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வுபெற்ற, மரணித்த, சேவையை விட்டுச்சென்ற மற்றம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 211,493 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம் | சில கடன் மீதிகளை கணக்குப் பொழிப்பு மற்றும் மரண பணிக்கொடை மூலம் அறவிடுவதற்கும் அறவிட முடியாத கடன்மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு பீ கணக்கு மற்றும் தனியால் கடன் பதிவேடுகளின் இறுதி கடன் மீதிகளுக்கு இடையே 14 சந்தர்ப்பங்களில் ரூபா 251,516 ஆன வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியாக சீராக்கத் செய்யப்பட வேண்டும். | காலாண்டிற்குரிய தனியாள் மீதிகளைக் கணக்கிடும் போதும் முன்கொண்டு வரும் போதும் தவறாக கணக்கிடல் போன்ற விடயங்கள காரணமாக வேறுபாடு இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.5 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுளை மிகைத்துள்ள ரூபா 467,000 கூட்டுத்தொகையான 03 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் மதப்பீடு தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய எதிர்வரும் செயற்பாடுகளுக்காக ரூபா 429,859 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் ஏனைய வைப்புக்கள் தொடர்பாக உரிய நிறுவனம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.6 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்த போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 74,193 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Out come) அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் கம்பஹா தாவரவியல் பூங்காவின் சூரிய மின்சார முறைமை ரூபா 2,475,200 கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு நிறுவப்பட்டிருந்த போதிலும், இதன் மூலம் மாதாந்தம் 2,400 கிலோவோட் உற்பத்தி செய்யப்படுவதாக நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இம்முறைமை மூலம் மாதாந்தம் 677 கிலோவோட் (350-1000) அதாவது 28 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | போதியளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் என்னவென்று ஆராய்ந்து பார்த்து அதனை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் மூலம் எதிர்பார்த்த மின் அலகுகளின் அளவில் 100 சதவீதத்தை பெற்றுக் கொள்ள முடியாத போதிலும் ஒவ்வொரு மாதமும் போதியளவு மின்சார அலகுகள் உற்பத்தி செய்யப்படுவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) | கம்பஹா தாவரவியல் பூங்காவிற்கு வருகை தருவோரின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் ரூபா 23,760,000 ஆன கிரய மதிப்பீடொன்றின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட ஓர்கிட் வளர்ச்சி கட்டத்தில் 572 நாற்றுக்கள் காணப்படுவதுடன் அதில் 50 நாற்றுக்களில் பூக்கள் பூத்து இருந்த காரணமாக ஓகிட் தாவரத்தின் அழகு குறைவடைந்திருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்நிலைமையை தவிர்ப்பதற்காக தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2000 ஒகிட் நாற்றுக் கன்றுகள் மாத்திரம் வழங்கப் பட்டிருந்ததாகவும் தாவரங்களை கிரமமாக பேணிச் செல்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (இ) | பேராதனை தாவரவியல் பூங்காவின் கீழ் உள்ள கல்வி நிலையத்தின் மூலம் NVQ 3 மற்றும் 4 பூங்கா அலங்கார நிபுணர் பாடநெறியின் கடந்த 05 ஆண்டுகளில் விண்ணப்பங்கள் கிடைத்த அளவில் பதிவு செய்யப்பட்ட | மாணவர்கள் அறிவூட்டப்பட்டு பாடநெறிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | NVQ 4 பாடநெறிக்கு மாணவவர்கள் விண்ணப்பம் செய்வது, நேர்முக பரீட்சைக்கு வருவதும் பதிவு செய்வதும் பாடநெறிகளை விட்டுச் செல்வதும் பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒப்பாக பாடநெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை 22 சதவீதம் முதல் 64 சதவீதம் வரை காணப்பட்டது. | | செய்வதும் எமது கட்டுப்பாட்டின் கீழ் காணப்படவில்லை |
| (ஈ) | பேராதனை தாவரவியல் பூங்காவின் கீழ் உள்ள கல்வி நிலையத்தின் மூலம் பூக்கள் வளர்ப்பு மற்றும் பூங்கா அலங்காரத்திற்குரிய NVQ 5, 6 பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாடநெறிகளை ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (உ) | கம்பஹா தாவரவியல் பூங்காவிற்கு இரும்பு கிறில் மற்றும் கொங்கிறீட் சட்டகத்துடன் பாதுகாப்பு வேலி நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று 2019 யூலை 09 ஆந் திகதி ரூபா 1,967,490 இற்கு கையளிக்கப் பட்டிருந்தது. இது அத்தனகல ஓயாவின் எல்லையில் 50 அடி அளவில் நிர்மாணிக்கப்படாமல் ஓரச் சுவர் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பு கிடைத்திருக்கவில்லை. | மதிப்பீடு சரியான பரிந்துரைகளுக்கு இணங்க எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு எல்லைக்குள் கிறில் மற்றும் கொங்கிறீட் சட்டகத்துடன் பாதுகாப்பு சுவருடன் கூடிய பாதுகாப்புச் சுவரின் ஒரு பகுதியொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் எஞ்சிய வேலையின் வேலைகளை நிறைவு செய்வதற்காக நிதி ஏற்பாட்டை 2020 பாதீட்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தியுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 97,707,888 ஆன 22 நிர்மாண ஒப்பந்தங்களின் நிர்மாண செயற்பாடுகள் 21 நாட்கள் முதல் 95 நாட்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண செயற்பாடுகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

### 3.3 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 34,249,721 தொகையான 04 செயற்திட்டங்கள் நிர்மாண நடவடிக்கைகள் உரிய திகதியில் இருந்து 17 நாட்களுக்கும் 36 நாட்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | நிர்மாண செயற்பாடுகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பேராதனை தாவரவியல் பூங்காவின் பிரதான நுழைவாயில் அருகே உள்ள பால் விற்பனை நிலையத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரும் போது முன்னைய 5 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு நிபந்தனை உள்ளடக்கப்பட்டமையால் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 வழிகாட்டல் நிதியத்திற்கு முரணாக இருந்தது. மேலும் கூறுவிலையை மீளப் பெற்றிருந்த ஆகக்கூடிய பெறுமதியில் சமர்ப்பித்த முதலாவது மற்றும் இரண்டாம் கேள்விதாரர்கள் 5.3.11(ஆ) வழிகாட்டல் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 கேள்வி பாதுகாப்பினை 2020 சனவரி 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பேராதனை தாவரவியல் பூங்காவின் பிரதான பேர்கோலவை திருத்த செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 61.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 07 ஆம் இலக்க உருப்படியின் மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 544,300 ஆக இருந்த போதும், அது ரூபா 371,250 இற்கு நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரரால் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11(அ) வழிகாட்டல் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உருப்படி இல 5 மற்றும் 7 இற்காக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 வழிகாட்டல் பிரகாரம் ஒப்பந்தக்காரரின் நிபந்தனைகளுடன் இணங்குவதாக பிரதான பொறியியலாளர் உறுதிப்படுத்தப்பட்டு ரூபா 944,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இலங்கை தேசிய பொறியியலாளர் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் NERDS தொழில்நுட்பத்திற்கு இணங்கியதா என்பது தொடர்பாக தரச்சான்றிதழ் ஒன்றை கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் இலங்கை தேசிய பொறியியலாளர் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் NERDS 2018 ஏப்ரல் 20 ஆந் திகதிய கடிதம் மற்றும் தர அறிக்கையின் பரகாரம் இந்த கொங்கிரீட் நிலம் தரமில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டியல் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | சீத்தாவக்க ஈர வலயத்தின் தாவர பூங்கா வனப் பகுதியில் அமைந்துள்ள சங்கிலி வேலியொன்றை நிர்மாணிப்பதற்காக ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த 05 ஒப்பந்தக்காரர்களிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளாமல் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டல் நியதிகளுக்கு புறம்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளையும் கருத்திற் கொள்ளாமல் ரூபா 4,053,000 ஆன சுறுவிலையை சமர்ப்பித்த 6 கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,158,400 தொகையான நிதி நட்டமொன்று இடப்பட்டிருந்தது. மேலும், 7.9.11(இ) வழிகாட்டலின் பிரகாரம் கூடிய செயலாற்றல் பாதுகாப்பொன்று பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்த பெறுமதியின் 5 சதவீதம் அதாவது ரூபா 202,650 ஆன பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | சீத்தாவக்க ஈர வலயத்தின் தாவர பூங்காவின் கராஜை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2(க) வழிகாட்டலின் நியதிகளுக்கு புறம்பாக ரூபா 2,899,630 ஆன குறைந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டு 2019 மே 06 ஆந் திகதி ரூபா 2,982,415 இற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 86,785 ஆன நிதி நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. மேலும், 7.10 வழிகாட்டலின் பிரகாரம் குறைந்த கேள்விதாரரின் முன்னைய தகைமைகள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (உ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(அ) வழிகாட்டலின் பிரகாரம் அவிஸ்ஸாவெல தாவரவியல் பூங்காவின் அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்காக 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 25,682,196 பெறுமதியான ஒப்பந்தத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,284,110 பெறுமதியான செயலாற்றல் பாதுகாப்பு பிணையின் செல்லுபடிக்காலம் | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தம் நிறைவு பெறுவதற்கு எதிர்பார்த்த திகதியின் பின்னர் 28 நாட்கள் வரை செல்லுபடியாகும் வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மூலம் வழங்கப்பட்டுள்ள நியம கேள்வி ஆவணங்கள் பெறுகை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்குரிய ஒப்பந்த உடன்படிக்கை பத்திரம் பொறுப்பேற்றல் கடிதங்கள் என்பவற்றிற்காக நியம கேள்வி ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியம கேள்வி ஆவணங்கள் பெறுகை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (எ) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தங்களுக்குரிய நியம கேள்வி பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்குரிய நிபந்தனைகள் கேள்வி பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தங்களுக்குரிய நிபந்தனைகள் கேள்வி பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (ஏ) | பேராதனை தாவரவியல் பூங்காவின் CCTV கெமறா முறைமையொன்று பொருத்துவதற்காக ரூபா 7,200,000 நிதிஏற்பாடொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி ரூபா 16,645,373 பெறுமதிக்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 வழிகாட்டலின் பிரகாரம் இதற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் | நிர்ணயிக்கப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லைக்குள் நடவடிக்கை எடுத்தல் மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்ணயிக்கப்பட்ட மிகையொன்று இடம் பெற்றுள்ளதாகவும் அது திணைக்களத்தின் சேமிக்கப்படும் நிதி ஏற்பாடுகளில் முகாமை செய்யப்படுமெனவும் செயலாற்றல் பாதுகாப்பு திகதியை நீடிக்க முடியாதென்றும் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வேலை பூர்த்தி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் இது 2019 செப்தெம்பர் 09 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் பாதுகாப்பினை அதன் பிரகாரம் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 வழிகாட்டலின் பிரகாரம் வேலை பூர்த்தி சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக அறவிட வேண்டிய தாமதக் கட்டணமாக ரூபா 1,664,537 அறவிடப்படாமல் இருந்ததுடன் நிர்மாணத் திற்குரிய உத்தரவாத காலத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. இதற்காக மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 11,630,310 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | பொறுப்பேற்றல் கடிதங்களின் பிரகாரம் கேள்விதாரரால் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு 14 நாட்களுக்குள் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டிய போதிலும் செயற்படுத்தப்பட்ட ரூபா 60,085,527 பெறுமதியான 19 நிர்மாண ஒப்பந்தங்கள் உடன்படிக்கை கைச்சாத்திடல் பொறுப்பேற்றல் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட திகதிகளை விட 17 நாட்களுக்கு 87 நாட்களுக்கும் இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதிக்குள் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஒ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 11,080,368 தொகையான 13 நிர்மாண ஒப்பந்தங்கள் ஒப்பந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 08 நாட்களுக்கும் 77 | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை |

| | | |
|---|---|---|
| நாட்களுக்கும் இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஓ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 14,407,402 பெறுமதியான 16 ஒப்பந்தங்கள் கேள்வி பாதுகாப்பு பிணையின் செல்லுபடிக்காலம், ஒப்பந்த உடன்படிக்கை செய்த திகதியை விட 04 நாட்கள் முதல் 60 நாட்கள் வரை கூடுதலாக காலமொன்றுக்காக செல்லுபடியாகுமாறு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை |

## 3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இணக்க அறிக்கையின் 8.3, 10.3, 12.3, 13.1, 14.2, 17.3, 19.1, 19.2 மற்றும் 19.3 ஆகிய விடயங்களுடன் இணங்கியிருக்கவில்லை. | சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பேராதனை தேசிய தாவரவியல் பூங்காவிற்குரிய மொத்த காணி 149 ஏக்கர், 238 பேர்ச் ஆக இருந்ததுடன் இதில் ¾ ஏக்கர் பரப்பளவிலான 1092 ஆம் இலக்க உத்தியோகபூர்வ | திணைக்கள உடமை கொள்ளும் அனைத்து காணிகளுக்கும் சிக்கலற்ற உரித்தினை கையேற்க | புரிந்துணர்வு பரஸ்பர அடிப்படையில் உள்ள 02 திணைக்களங்களாக இருப்பதால் இது தொடர்பாக விவசாய பணிப்பாளர் நாயகத்திற்கு உட்பட |

| | | | |
|---|---|---|---|
| | விடுதி மற்றும் 24 பேர்ச் பரப்பளவிலான 1092 A ஆம் இலக்க கட்டிடம் விவசாய திணைக்களத்தினால் உடமை கொள்ளப்பட்டிருந்ததுடன் 1971 இன் 07 ஆம் இலக்க மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரச வீடுகள் (உரித்தினை கையேற்றல்) சட்டத்தின் கீழ் மீள கையேற்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | விவசாய செயலாளருக்கு இறுதி அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சட்டரீதியாக கையேற்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | கனேவத்த வள மருந்துப் பூங்காவில் விரிவுரைகள், பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடாத்தும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 23,392,342 செலவினம் மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாடி விரிவுரை மண்டப மொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் 2019 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் 59 விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கியதால் ரூபா 24,250 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாரிய கிரயமொன்றை மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதம் அளவில் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன. ஆண்டின் இறுதி வரை 25 பயிற்சி வகுப்புக்கள் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்களுக்கு இந்த பூங்காவிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பாக அறிவூட்டுவதன் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. |
| (இ) | கம்பஹா தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான டாடா டபிள் கெப் வண்டி 2018 ஆகஸ்ட் மாதம் முதல் நிறுத்தி வைத்த நிலைமையில் காணப்பட்டதுடன் அது முறையாக கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் முறையாக கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டும். | இவ்வண்டியை திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக சாதகமில்லை என தீர்மானிக்கப்பட்டதால் தொழில்நுட்ப நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கம்பஹா தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மீரகல் பூங்காவில் அமைந்துள்ள பூக் கன்றுகளுக்காக உரிய வகையில் நீர் வழங்கும் நோக்கில் 2017 நவம்பர் 03 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 447,987 பெறுமதியான நுண் நீர் வழங்கல் முறைமை 2019 யூலை 19 ஆந் திகதி வரையிலும் அப்பூங்காவில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நுண் நீர் வழங்கல் முறைமையின் பகுதியொன்று ஏற்கனவே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாடு எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | கம்பஹா தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மீரகல் பூங்காவில் அமைந்துள்ள அலங்காரத்திற்காக 2017 யூலை மாதம் 5x5x5 அங்குல அளவிலான 30,000 பூச்சாடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 5800 மாத்திரம் 2019 யூன் 19 ஆந் திகதி வரை பயன்படுத்தியிருந்ததுடன் ரூபா 294,000 பெறுமதியான 21,000 பூச்சாடிகள் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டம். | மீரகல் முறைமைக்காக பயன்படுத்திய பூச்சாடிகள் அநேகமான தொட்டிகள் உருக்குலைந்து இருப்பதால் அவற்றை அகற்றி புதிய பூச்சாடிகளை பயன்படுத்துவதற்கும் மிகையான தொட்டிகளை நாற்றுக்களை உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டதாக அறிய தருகின்றேன். |
| (ஊ) | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளாமையால் 2018 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கம்பஹா தாவரவியல் பூங்காவில் முறையே ரூபா 191,355 மற்றும் ரூபா 261,603 செலவிடப்பட்டு பூச்சு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 289,891 பெறுமதியான 556 லீற்றர் பூச்சு 2019 யூலை 17 ஆந் திகதி களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டம். | களஞ்சியத்திலுள்ள வர்ண பூச்சுக்களில் அநேகமானவை தற்போது பயன்படுத்தி வருவதுடன் அப்பொருட்கள் சீரற்ற காலநிலை காரணமாகவும் அது தொடர்பான உரிய பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறையே தாமதத்திற்கு காரணம் என குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பேராதனை அரச தாவரவியல் பூங்கா முன்னால் பால் விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக 2019 நவம்பர் 13 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2019 நவம்பர் 18 ஆந் திகதி முதல் 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரை 13 நாட்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 178,533 தொகை 2019 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | கம்பஹா தாவரவியல் பூங்காவின் உத்தியோகத்தர் ஒருவரால் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் நடாத்தப்படும் விவசாய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ பட்டப்படிப்பு பாடநெறியை பின்பற்றுவதற்கான சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அப்பாடநெறி பூர்த்தி செய்யப்படாததன் பேரில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 பந்தியின் நியதிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,051,390 தொகையை அறவிடுவதற்கு 2019 யூலை 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பாடநெறிக்காக அரசினால் செலவிடப்படும் பணத்தை விரைவில் அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப் பட்டிருந்தது. |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2020 மே 30 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்படாமல் இருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,361,828 ஆக இருந்தது. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரிய காலப்பகுதியில் பதில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 மார்ச் 26 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய இலங்கை சனநாயக குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருந்த விடயங்களின் பிரகாரம் புதிய தாவரவியல் பூங்காக்களை இலங்கையில் பொருத்தமான இடங்களில் தாபிக்க முடியுமான போதும் வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் மேவுகை செய்யப்படும் வகையில் தேசிய பூங்காக்களை தாபிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | புதிய தாவரவியல் பூங்காக்களை இலங்கையின் இலங்கையில் பொருத்தமான இடங்களில் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | தாவரவியல் பூங்காக்களை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான இடயங்களை தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட கடிதங்கள் உரிய மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) கண்டி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான அழகிய வாசனை சங்கங்கள் பதிவு செய்யப்படா திருந்ததுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்ட மலர்ச் சங்கங்கள் 07 ஆக இருந்தன. | புதிய சுவஹஸ் பூ சங்கங்கள் பதிவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | சுவஹஸ் பூ சங்கங்கள் பேணிச் செல்வதற்காக சட்டவிதியொன்று காணப்படுவதுடன் அதன் பிரகாரம் கமநல அதிகாரப் பிரசேத்திற்கு 01 சங்கத்தை தாபிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. புதிதாக சுவஹஸ் பூ சங்கங்கள் ஆரம்பிக்கப்படாத போதும் சங்கங்களின் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (இ) | கணேவத்த வன மருந்து பூங்கா 21 ஏக்கர் பரப்பளவில் காணப்படுவதுடன் இங்கு பெறுமதியான 1000 வகையான மருந்துகள் காணப்பட்ட போதும், தாவர பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சகல பூங்காக்களிலும் காணப்படும் தாவர வகைகள் இனங்காணப்பட்டு தாவர பதிவேடொன்று பேணிச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கணேவத்த வன மருந்து பூங்காவிற்கு இணைக்கப்பட்டுள்ள சேவை புரியும் பூங்கா அபிவிருத்தி உதவியாளர்களால் தற்போது தேசிய மர ஆய்வுகூடத்தின் ஒத்துழைப்புடன் தற்போது 600 தாவரங்கள் இனங்காணப் பட்டுள்ளதுடன் அவற்றை பதிவேடுகளுக்கு உட்படுத்தியுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்காக ஒவ்வொரு ஆண்டிலும் நிறைவேற்றக்கூடிய அளவுகள் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் குறித்த நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்யடிதுடன் திணைக்களத்தினால் ஒவ்வொரு | ஒவ்வொரு ஆண்டிலும் நிறைவேற்றக்கூடிய அளவுகள் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

ஆண்டிற்காகநிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இல் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் தொடர்பான சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆண்டிற்கு இரு தடவை அல்லது ஓராண்டிற்கு ஒரு முறை பிரிவின் பிரகாரம் தகவல் அறியும் சட்டம் உரிமை தொடர்பான ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக இணக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் அவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள் குறித்துரைத்தன் பிரகாரம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை 143 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாக மற்றும் சரியாகவும் பேணிச்செல்வதற்கு அத்திவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பேராதனை அரச தாவரவியற் பூங்காவின் பட்டரி காருக்காக 08 அங்கீகரிக்கப்பட்ட சாரதிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவர்களை ஆட்சேர்க்கும் ஆட்சேர்ப்பு நடைமுறை கணக்காய்வு திகதியான 2019 திசெம்பர் 17 ஆந் திகதி வரை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்துக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |